# எசாலம் செப்பேடுகள் காட்டும் நிலங்களும் நீர்நிலைகளும்

# Lands and Water Bodies Shown in Esalam Copper Plates

***கி. பாக்கியலட்சுமி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
சென்னை சம்ஸ்க்ருதக் கல்லூரி
சென்னை, இந்தியா

**K. Bakiyalakshmi**
*Ph.D. Research Scholar*
*The Madras Sanskrit College*
*Chennai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ்நாட்டு வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்து எழுதுவதற்கு கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள், அகழாய்வுத் தொல்பொருட்கள், தொல்லியல் சின்னங்கள் போன்றவை முதன்மைத் தரவுகளாகத் திகழ்கின்றன. அத்தகைய முதன்மைத் தரவுகளில் அரசியல் வரலாற்றினை எழுதுவதற்கு செப்பேடுகள் முதன்மையிடம் பெறுகின்றன. ஏனெனில், செப்பேடு களின் வடமொழிப் பகுதி செப்பேட்டினை வெளியிட்ட மன்னனின் முன்னோர்கள் பற்றிய செய்திகளையும் அவர்களது வீரச் செயல்களையும் விரிவாக எடுத்து ரைக்கின்றன.*

*எசாலம் செப்பேடு முதலாம் இராசேந்திர சோழனால் வெளியிடப்பட்டது. அச்செப்பேடு பல்வேறு வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றது. இம்மன்னனின் குருவான சர்வசிவ பண்டிதரால் எய்தார் என்னும் ஊரில் எடுக்கப்பட்ட திருவிராமீஸ்வரம் கோயிலுக்கு இரண்டு ஊர்களைத் தானமாக வழங்கியுள்ள செய்தியினைப் பகிர்கின்றது. அவ்வாறு வழங்கப்பட்ட ஊர்களில் இருந்த நிலவகைகளையும் நீர்நிலைகளையும் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## Abstract

*Inscriptions, plates, coins, archaeological artifacts, archeological symbols etc. are the primary data to reconstruct and write the history of Tamil Nadu. In such primary data, Seppads gets prime position to write political history. Because the vernacular portion of the Cheppets recounts in detail the stories of the ancestors of the king who published the Cheppet and their heroic deeds.*

*Esalam Seppedu I was published by Rajendra Chola. Acheppedu gives various historical messages. It shares the news that Sarvasiva Pandita, the guru of this king, donated two villages to the Thiruvirameswaram temple taken in Eidar. The purpose of this article is to study about the dungeons and water bodies in the cities that were so given.*

**Citation**

Bakiyalakshmi, K. "Lands and Water Bodies Showing Esalam Copper Plates." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 95–101.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095611*

**எசாலம் - ஊர் அமைவிடம்**

*விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்திலிருந்து செஞ்சி செல்லும் சாலையில் நேமூர் என்னும் நெடுஞ்சாலையிலிருந்து ஆறு கி.மீ. தொலைவில் எசாலம் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. எசாலம் ஊரைச்சுற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்கள் அமைந்துள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் முதன்முதலாக எடுப்பித்த மண்டகப்பட்டு குடைவரை இவ்வூருக்கு மிக அருகில் உள்ளது. மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க எண்ணாயிரம், பிரம்மதேசம் ஆகிய ஊர்களும் இங்கு அமைந்துள்ளன. இவ்வூர்களில் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தைச் சார்ந்த பாடலீசுவரர் கோயிலும், முதலாம் குலோத்துங்க சோழன் காலத்து பிரம்மபுரீசுவரர் கோயிலும் உள்ளன. சோழர் காலத்தில் எண்ணாயிரத்தில் கல்லூரி ஒன்று இயங்கியுள்ளதை அங்குள்ள பெருமாள் கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மேலும், இவ்வூருக்கு அருகில் உள்ள மேல்கூடலூரில் சமணர் தீர்த்தங்கரர் சிற்பங்களும் படுக்கைகளும் காணப்படுகின்றன.*

**எசாலம் செப்பேடு**

*எசாலம் கிராமத்தில் திருவிராமீஸ்வரம் என்றழைக்கப்படும் சிவன்கோயில் ஒன்றுள்ளது. இக்கோயிலில் 1987 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11-ஆம் தேதி திருப்பணிக்காக பூமியைத் தோண்டியபோது 20 - க்கும் மேற்பட்ட செப்புத் திருமேனிகளும் செப்பேடு ஒன்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் கண்டறியப்பட்டது. இச்செப்பேடு பதினைந்து ஏடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு செப்பேடும் 34 செ.மீ. நீளமும் 16.5 செ.மீ. அகலமும் கொண்டுள்ளன. இந்த ஏடுகள் அனைத்தும் ஒரு வளையத்தில் கோர்க்கப்பட்டு சோழ அரசின் இலச்சினையுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த இலச்சினை 13.5 செ.மீ. விட்டம் கொண்டது. இந்த இலச்சினையில் சோழரின் புலிச் சின்னமும் பாண்டியரின் இரட்டைக் கயல்களும் சேரரின் வில்லும் சாளுக்கியரின் பன்றி உருவமும் காணப்படுகின்றன. சோழப் பேரரசுக்கு உட்பட்ட நாடுகளாக பாண்டிய நாடும் சேர நாடும் சாளுக்கிய நாடும் இருந்தன என்பதைக் குறிக்கும் வகையில் அந்தந்த நாட்டு இலச்சினைகளும் இடம்பெற்றுள்ளன. மேலும், அந்த இலச்சினையில் கிரந்த எழுத்துகளில் மன்னனைப் போற்றி சுலோகம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.*

***ராஜத் ராஜன்ய மகுடேச்ரேணி ரத்னேஷூ சாஸநம்***
***ஏதத் ராஜேந்த்ர சோளஸ்ய பரகேஸரி வர்ம்மன:***

*அரசர்களின் திருமுடி வரிசைகளின் இரத்தினங்களில் திகழ்வதான பரகேசரி வர்மனான ராஜேந்திரசோழனின் சாசனம் என்பது இச்சுலோகத்தின் பொருளாகும்.*

*பொதுவாக இடைக்கால வரலாற்றுக் காலச் செப்பேடுகள் இரண்டு பகுதிகளாக எழுதப்பட்டிருக்கும். முதற்பகுதி வடமொழியில் கிரந்த எழுத்துகளால் பொறிக்கப்பட்டிருக்கும். இரண்டாம் பகுதி தமிழ் மொழியில் தமிழ் எழுத்துகளால் பொறிக்கப்பட்டிருக்கும். அதுபோலவே, இச்செப்பேடும் அமைந்துள்ளது. முதல் பகுதியான வடமொழிப் பகுதி நான்கு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியான தமிழ்ப் பகுதி 11 ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. எசாலம் செப்பேடானது சோழ அரசை சோழப் பேரரசாக உயர்த்திய முதலாம் இராசராசனின் மகனான முதலாம் இராசேந்திரனின் 25-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இச்செப்பேடு பொ.ஆ. 1036-37 ஆம் ஆண்டுக்குரியது என்று வரையறுக்கலாம்.*

*வடமொழிப் பகுதியில் தஞ்சையில் முதலாம் இராசராசன் இராஜராஜீஸ்வரமுடையார் கோயில் எடுப்பித்தச் செய்தியும் கங்கைகொண்டசோழபுரத்தில் கங்கை வெற்றியின் நினைவாக கங்கைகொண்டசோழீஸ்வரம் கோயில் எடுப்பித்தச் செய்தியும் இடம்பெற்றுள்ளது.*

தமிழ்நாட்டில் கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளிலோ அல்லது கங்கைகொண்ட சோழபுரக்கோயில் கல்வெட்டுகளிலோ முதலாம் இராசேந்திரன் கங்கைகொண்டசோழபுரம் எடுப்பித்த செய்தி இடம்பெறவில்லை. எசாலம் செப்பேடே இச்செய்தியை முதன் முதலாக தெரிவிப்பது சிறப்பாகும்.

ஜெயங்கொண்டசோழமண்டலத்துப்பனையூர்நாட்டு இராசராசசதுர்வேதிமங்கலத்துப் பிடாகை ஊரான எய்தார் என்னும் ஊரில் மதுராந்தகனாகிய முதலாம் இராசேந்திரனின் குருவான சர்வசிவ பண்டிதர் திருவிராமீஸ்வரம் என்னும் சிவன் கோயிலை எடுப்பித்துள்ளார். அக்கோயிலுக்கு மன்னன் முதலாம் இராசேந்திரன் நன்னாடு மற்றும் ஏர்ப்பாக்கம் எனும் இரு ஊர்களை ஒன்றாக்கி விக்கிரமசோழ நல்லூர் என்று பெயரிட்டு தானமாக வழங்கியுள்ளார். இத்தானத்தினை முதலாம் இராசேந்திரன் காஞ்சிபுரத்து அரண்மனையில் தமது வீட்டினுள்ளால் மன்னன் குளிக்குமிடத்திலிருந்து வழங்கியுள்ளார்.

மன்னன் முதலாம் இராசேந்திரன் தானமாக வழங்கிய இவ்வூர்களின் எல்லைகளைத் தெளிவாகக் குறிப்பிடும் விதமாக அவ்வெல்லைகளுக்குள் இருந்த நிலங்களின் தன்மைகள், நீர்நிலைகள் போன்றவையும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**நிலங்களும் நீர்நிலைகளும்**

இச்செப்பேட்டில் ஊர் இருக்கை, ஊருணிக்குளம், கரையும் ஓடையும், வதி, வாய்க்கால்கள், ஜநநாத சதுப்பேதிமங்கலத்து ஏரி, ஜநநாத சதுப்பேதி மங்கலத்து ஏரிக்குப் பாயும் சிற்றாறு, மணிமுத்தாறு, ஐந்தளி மாதேவர் திருநந்தவனம், திருவிராமீஸ்வரம் திருநந்தவனம், கன்று மேய் பாழ்நிலம், சுடுகாடு, ஜநநாத சதுப்பேதிமங்கலத்து ஏரிநீர்க் கோவை, களர் நிலம், உவர் நிலம், ஏத்தம், இரு பூ விளை நிலம், ஒரு பூவிளை நிலம், வரகு, எள்ளு, கொள்ளு, துவரை உள்ளிட்ட புன்செய் பயிர்கள், புன்செய், வடகரை புழுதிபாடு, ஈங்கை நின்ற புற்று, களர் புற்று, புன்கம் மேடு, ராஜசூளாமணி வாய்க்கால், நிகரிலிசே ஏழ வாய்க்கால், ஜயங்கொண்டசோழ வதி, நத்தம், பழவாய்க்கால், ராஜேந்திரசோழ வாய்க்கால், நீர்நிலம், புன்செய் நிலம், ஊர், ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், மனை, மனைபடப்பை, கடை, கடைத்தெரு, கம்மாணச்சேரி, பறைச்சேரி, சுடுகாடு, படுதுறை, மன்று, கன்றுமேய், பாழ் குளம், கொட்டகம், கிடங்கு, கேணி, புற்றுற் தெற்றி, காடு, பீடிலிகை, கல்லு, களர், உவர், ஆறு, ஆறிடு படுகை, மடை, உடைப்பு, ஏரி, ஏரிநீர்க்கோப்பை, மீன்பயில் பள்ளம், தேன்ப்பயில், பொதும்பு, ஆற்றுக்கால், வாய்க்கால், குமிழி, மடை, உடைப்பு போன்ற சொற்றொடர்கள் இடம்பெற்றுள்ளன.

**ஊர் நிலவியல் அமைப்பு**

இச்செப்பேட்டில் நீர்நிலம், புன்செய் நிலம், ஊர், ஊரிருக்கை, ஸ்ரீகோயில், திருமுற்றம், மனை, மனைபடப்பை, கடை, கடைத்தெரு, கம்மாணச்சேரி, பறைச்சேரி, சுடுகாடு, படுதுறை, மன்று, கன்றுமேய், பாழ் குளம், கொட்டகம், கிடங்கு, கேணி, புற்றுற்தெற்றி, காடு, பீடிலிகை, கல்லு, களர், உவர், ஆறு, ஆறிடு படுகை, மடை, உடைப்பு, ஏரி, ஏரிநீர்க் கோப்பை, மீன்பயில் பள்ளம், தேன்ப்பயில், பொதும்பு, ஆற்றுக்கால், வாய்க்கால், குமிழி, மடை, உடைப்பு போன்ற சொற்றொடர்கள் ஓர் ஊரின் நிலவியல் அமைப்பைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இதன்வாயிலாக, இவ்வூரின் அன்றைய நிலங்களின் வகைகளையும் நீர்நிலைகளையும் குடியிருப்புகளையும் கோயில்களையும் தெளிவாகக் காண்கிறோம்.

*மக்கள் வாழ்விடப்பகுதியினை ஊர், ஊரிருக்கை, நத்தம் என்றும் குடியிருப்பு மனை மற்றும் மனையைச் சுற்றியுள்ள காலியிடப்பகுதி மனைப்படைப்பு என்றும் அழைக்கப்பட்டுள்ளது. ஊரின் ஒரு பகுதியாக சுடுகாடும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் சுடுமண் ஓடு கொண்டு மாடமாளிகை கட்டிக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளனர்.*

**வேளாண் பயிர்கள், மரங்கள்**

*வேளாண் நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். நன்செய் நிலத்தினை நீர்நிலம் என்றும் அந்நிலத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது. மேலும், நெல் விளையும் நிலம் எத்தனை போகம் விளையக்கூடியது என்பதனை இரு பூ விளை நிலம், ஒரு பூவிளை நிலம் என்று குறிப்பிட்டுள்ளனர். புன்செய் நிலத்தில் விளையக்கூடிய பயிர்களாக வரகு, எள்ளு, கொள்ளு, துவரை ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. பயிரிடுவதற்கு தகுதியற்ற நிலங்களை களர் நிலம், உவர் நிலம், களர் புற்று என்றழைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.*

*கால்நடைகள் மேய்வதற்கென்று தனியாக ஊரில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்நிலம் கன்று மேய் பாழ்நிலம் என்றழைக்கப்பட்டுள்ளது.*

*ஊர்ப் பொதுவிடங்களில் தென்னை, கமுகு (பாக்கு மரம்), பனை, பலா, மா, தமனகம் (மருக்கொழுந்து), இருவேலி (வெட்டிவேர்), செண்பகம், செங்கழுநீர் (செங்குவளை) ஆகிய பயன்தரு மரங்களையும் பூவினங்களையும் வைத்துக்கொள்ள அனுமதியளித்துள்ளனர். இதன் மூலம் பயன்தரு மரங்களை அறிந்துகொள்ள முடிகிறது. ஐந்தளி மாதேவர் மற்றும் திருவிராமீஸ்வரம் கோயில்களில் திருநந்தவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது .*

*இவ்வூர் எல்லைக்குட்பட்ட இடங்களில் தென்னங்கள் மற்றும் பனங்கள் இறக்கக்கூடாது என்று ஈழவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது . எனவே, ஊர்ப் பகுதிகளில் கள் இறக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. கள் இறக்குவதற்கு ஈழப்பூட்சி என்ற வரிவசூல் செய்துள்ளனர்.*

**நீர்நிலைகள்**

*மணிமுத்தாறு, ஜநநாத சதுப்பேதி மங்கலத்து ஏரிக்குப் பாயும் சிற்றாறு, ராஜசூளாமணி வாய்க்கால், நிகரிலிசோழ வாய்க்கால், ராஜேந்திரசோழ வாய்க்கால், பழவாய்க்கால், ஜநநாத சதுப்பேதிமங்கலத்து ஏரி, ஜநநாத சதுப்பேதிமங்கலத்து ஏரிநீர்க் கோவை, ஜயங்கொண்டசோழ வதி, ஏத்தம், ஊருணிக்குளம், கரையும் ஓடையும், குளம், கோட்டகம், கிடங்கு, கேணி, ஆறு, ஆறிடு படுகை, ஓடை, உடைப்பு, ஏரி, ஏரிநீர்க்கோப்பை, மீன்பயில் பள்ளம், தேன்ப்பயில், பொதும்பு, ஆற்றுக்கால், வாய்க்கால், குமிழி, மடை, உடைப்பு, போன்ற சொற்றொடர்கள் செப்பேட்டில் இடம்பெற்றுள்ளன.*

*இவற்றின் மூலம் மணிமுத்தாறு, சிற்றாறு ஆகிய ஆறுகளையும் ஜனநாத சதுப்பேதிமங்கலத்து ஏரி, ராஜசூளாமணி வாய்க்கால், நிகரிலிசோழ வாய்க்கால், ராஜேந்திர சோழ வாய்க்கால், பழவாய்க்கால் ஆகிய குறிப்புகளின் மூலம் வாய்க்கால்களுக்கு இராச ராசசோழன் மற்றும் இராசேந்திரசோழன் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளதையும் அறிகிறோம்.*

*எனவே, ஆறு, ஆறிடு படுகை, ஆற்றுக்கால், சிற்றாறு, வாய்க்கால், ஏரி, ஏரிநீர்க் கோவை, குமிழி, கரை, ஓடை, ஊருணி, குளம், கோட்டகம் (பரந்த ஆழமான நீர்நிலை), மீன்பயில் பள்ளம், கேணி ஆகிய நீர்நிலைகளின் பெயர்களையும் ஆராய முடிகிறது.*

**நீர்மேலாண்மை**

*ஆற்றுக்கால், வாய்க்கால், குமிழி, மடை, உடைப்பு ஆகியவற்றால் நீர்ப்பாயப்பெறும் நிலங்களுக்கு ஏற்கனவே உள்ள நடைமுறைகளையே பின்பற்றப்படவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது அறியப்படுகிறது. ஏரிகளில் நீர்கொள்ளும் அளவுக்கு மட்டும் நீர் ஏற்றிக்கொள்ளவேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. ஏரிக்கு அருகிலுள்ள நில உரிமையாளர்கள் தங்களது நிலத்தில் கரையிட்டுக்கொள்ள அறிவுறுத்தியுள்ளனர். துரவு, கிணறு ஆகியவை வெட்டிக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளனர்.*

*குறங்கறுத்தல் (சிறு வாய்க்கால் ஏற்படுத்துதல்), குற்றேத்தம் செய்தல் (சிறு ஏத்தம் உருவாக்கல்), கூடைநீர் இறைத்தல் போன்ற செயல்களில் மற்றவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.*

*இச்செப்பேட்டில் நாடாட்சி, ஊராட்சி, வட்டி நாழி, பிதாநாழி, வண்ணாரப் பாறை, கண்ணாலக் காணம், இடைப்பாட்டம், குசக்காணம், தறிஇறை, தட்டார்ப்பாட்டம், தட்டழிப்பாட்டம், ஈழப்பூட்சி, மன்றுபாடு, மாவிறை, தீய்எரி, விற்பிடி, வாலமஞ்சாடி, நல்லாவும், நல்லெருதும், நாடுகாவல், ஊடுபோக்கு, இலைக்கூலம், நீர்க் கூலி, உல்கு, ஓடக்கூலி ஆகிய வரிகள் அரசால் வசூலிக்கப்பட்டதென்றும் இவ்வரிகளைக் கோயிலுக்கு அளித்திடவும் முதலாம் இராசேந்திரன் ஆணையிட்டுள்ளார் என்பதும் அறியப்படுகின்றது.*

**நிறைவு**

*எசாலம் செப்பேடு வாயிலாக அன்றைய ஊரின் நிலவியல் அமைப்பு, நிலங்களின் தன்மை, நன்செய் புன்செய்ப் பயிர்கள், பயன்தரு மரங்கள் வளர்ப்பதற்கு அனுமதி, ஊர்ப் பகுதியிலுள்ள மரங்களில் கள் இறக்க மறுப்பு, ஆறு, ஏரி, வாய்க்கால், குமிழி, ஓடை, ஊருணி, குளம், கிணறு போன்ற நீர் நிலைகளும் அவற்றினை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் பயன்படுத்தக் கூடாது போன்ற அறிவுரைகளும் ஊரில் அவற்றின் மீது வசூலிக்கப்பட்ட வரிகளைப் பற்றியும் அறிந்து கொள்கிறோம்.*

**சான்றெண் விளக்கம்**

1. கிருஷ்ணமூர்த்தி, ச., தமிழ்நாட்டுச் செப்பேடுகள் - தொகுதி -1, மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை, 2002, ப.எண் 51-52
2. கிருஷ்ணமூர்த்தி, ச., இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010, ப.எண் 1
3. Epigraphia Indica, Vol. XXXIX, No 34
4. கிருஷ்ணமூர்த்தி, ச., இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010, ப.எண் 1 - 2
5. மேலது, ப.எண் 4
6. மேலது, ப.எண் 3
7. மேலது, ப.எண் 4
8. கிருஷ்ணமூர்த்தி, ச., தமிழ்நாட்டுச் செப்பேடுகள் - தொகுதி -1, மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை, 2002, ப.எண் 51
9. Nagasamy, R., Archaeological Finds in South India: Eslam Bronzes and Copper
10. Plates of Rajendra & I, 1987 ப.எண் 34, வரிகள் 84-85
11. Nagasamy, R., Archaeological Finds in South India: Eslam Bronzes and Copper

12. Plates of Rajendra & I, 1987, p. 32, v.13
13. மேலது, p. 32, v.18
14. Nagasamy, R., 1987 Archaeological Finds in South India: Eslam Bronzes and Copper
15. Plates of Rajendra & I, வரிகள் 128-130
16. மேலது, வரிகள் 86-87
17. மேலது, வரி 93
18. மேலது, வரி 94
19. மேலது, வரி 95
20. மேலது, வரி 96
21. மேலது, வரி 96
22. மேலது, வரி 98
23. மேலது,வரிகள் 98-99
24. மேலது,வரி 99
25. மேலது, வரி 101
26. மேலது,வரி 107
27. மேலது,வரி 110
28. மேலது, வரி 111
29. மேலது, வரி 112
30. மேலது, வரி 113
31. மேலது, வரி 117
32. மேலது,வரி 117
33. மேலது, வரி 118
34. மேலது, வரி 120
35. மேலது,வரி 120
36. மேலது, வரிகள் 252-253
37. மேலது, வரி 254
38. மேலது, வரி 255
39. மேலது, வரி 256
40. மேலது,வரி 271
41. மேலது, வரிகள் 277, 284
42. மேலது, வரிகள் 278, 285
43. மேலது,, வரி 278
44. மேலது, வரி 279
45. மேலது,வரி 286
46. மேலது,வரிகள் 295 - 301
47. மேலது, வரி 309
48. மேலது, வரி 310
49. மேலது, வரிகள் 295 - 301
50. மேலது, வரிகள் 309 - 310
51. மேலது, வரி 278
52. மேலது, வரி 297

53. மேலது, வரி 111
54. மேலது, வரிகள் 315-316
55. மேலது, வரி117
56. மேலது, வரி118
57. மேலது, வரி120
58. மேலது, வரி 113
59. மேலது, வரிகள் 316-318
60. மேலது, வரிகள் 101,107
61. மேலது,வரிகள் 319, 321
62. மேலது, வரி 99
63. மேலது, வரிகள் 98-99
64. மேலது, வரி 271
65. மேலது, வரிகள் 277-284
66. மேலது, வரி 286
67. மேலது, வரி 279
68. மேலது, வரி 98
69. மேலது, வரி 112
70. மேலது, வரிகள் 278,285
71. மேலது, வரி 117
72. மேலது, வரி 94
73. மேலது, வரி 95
74. மேலது, வரிகள் 295-301
75. மேலது, வரிகள் 309-310
76. மேலது, வரிகள் 277 , 284
77. மேலது, வரிகள் 286, 279
78. மேலது, வரி 310
79. மேலது, வரி 314
80. மேலது, வரி 316
81. மேலது, வரிகள் 311-312